# கலைஞரும் நானும்

91


**"தான் ஈடுபட்ட அத்தனை துறையிலும் உழைப்பால் உயர்ந்தவர், சகாப்தமாக நிலைத்து நின்றவர் கலைஞர்" என தனது நினைவுகளைப் பகிர்கிறார் நடிகர் விஜயகுமார்.**

படம் : யோகா



# 'எனக்கான முதல் பரிந்துரை!'

**விஜயகுமார், நடிகர்.**



முத்தமிழறிஞர் கலைஞரின் கோடிக் கணக்கான உடன்பிறப்புகளில் நானும் ஒருவன் என்பது, எனக்கு என்றென்றைக்கும் மட்டற்ற மகிழ்ச்சி தரும். அவரை முதன்முதலாக நேரில் சந்தித்த, 1965-ஆம் ஆண்டிலிருந்து அவர் மறையும் காலம் வரை அவருடன் நல்ல நட்பு கொண்டிருந்தேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களை, சிங்கப்பூர் அழைப்பதற்காக எங்கள் பகுதி இளைஞர்களின் கோரிக்கையுடன், நாவலர் அவர்களை 1962-ஆம் ஆண்டு வாக்கில் சந்தித்தேன். அப்போது முதல், நாவலருடன் நல்ல தொடர்பு இருந்தது. 1965-ஆம் ஆண்டில், ஒருநாள் அவரை பார்க்கச் செல்கையில், "கலைஞரைப் பார்க்கச் செல்கிறேன், வருகிறாயா?" எனக் கேட்டார். நான் மிகவும் உற்சாகமாகிவிட்டேன்.

திரைத்துறை வாய்ப்புகளுக்காகக் காத்திருந்த நாட்களில், கலைஞரைச் சந்திப்பதில் எனக்கு உள்ளூர மகிழ்ச்சி. அதற்கு முன், கலைஞரை நான் நேரில் சந்தித்தது இல்லை என்பதால், உற்சாகமாக இருந்தேன்.

அப்போது ஆயிரம்விளக்கில் 'முரசொலி' அலுவலகம் இருந்தது. இரவு 12 மணி இருக்கும் நாவலர் அவர்களுடன் நானும் சென்றிருந்தேன். அந்த நேரத்திலும், கலைஞர் எழுதிக் கொண்டிருந்தார்.

அது சின்ன அறைதான். அந்த அறையில் உட்கார்ந்து, அந்த நேரத்திலும் எழுதிக் கொண்டிருந்ததைப் பார்த்து, எனக்கு வியப்பு. அப்போது திரைத்துறையில் உச்சத்தில் இருந்த கதாசிரியர் அவர். அப்போது அவரிடம் பார்த்த அந்த உழைப்பை அவரது கடைசி காலம் வரையும் பார்த்தேன்.

உழைப்புதான் அவரின் அடையாளம் என எந்நாளும் அடித்துச் சொல்வேன். அந்த உழைப்பு அவருக்கானது மட்டுமல்ல, தமிழ்நாட்டுக்காக, தமிழ் மக்களுக்காக, தமிழ் நிலத்துக்காக அந்த உழைப்பு என்பது, அப்போது நான் அறிந்திருக்கவில்லை.

## எனக்கான பரிந்துரை

நாவலர் என்னைக் காட்டி, "சிவாஜி அவர்களின் நடிப்பைப் பார்த்துவிட்டு, நடிக்க வந்திருக்கிறார்" என என்னை, கலைஞருக்கு அறிமுகம் செய்தார். "அப்படியா?" எனக் கேட்டவர், ''எந்த ஊரு?'' என்றதும், "பட்டுக்கோட்டை" என்றேன். "நல்லாயிருக்கீங்க தம்பி, நல்லா வருவீங்க" என ஊக்குவித்ததுடன், பட வாய்ப்புகள் குறித்துக் கேட்டார். "வாய்ப்பு தேடிக் கொண்டிருக்கிறேன்" எனக் கூறினேன். 'கந்தன் கருணை' படத்துக்கு டெஸ்ட் எடுத்துள்ளார்கள் என்றேன்.

உடனே, அப்போதே இயக்குனர் ஏ.பி. நாகராஜன் அவர்களுக்கு போன் செய்து, என்னைப் பரிந்துரை செய்தார். இப்போது யாரும் அப்படிச் செய்வார்களா என்று தெரியாது. ஆனால், கலைஞர் அப்போதே அதைச் செய்தார். நல்லகுணம் உள்ள பண்புள்ள மாபெரும் தலைவர் அவர்.

நான் மறுநாள் காலையிலேயே கோபாலபுரம் இல்லத்துக்கு எனது ஆல்பத்துடன் சென்று விட்டேன். கலைஞர் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். அப்போது முதல், அடிக்கடி கலைஞரைச் சந்திக்கத் தொடங்கினேன். அவரின் மகன்கள் அறிமுகம் கிடைத்து, இயல்பாக கோபாலபுரம் சென்று வரத் தொடங்கினேன்.

1973-ஆம் ஆண்டு, நான் கதாநாயகனாக அறிமுகமானேன். தொடர்ச்சியாக நடித்துக் கொண்டிருந்த நேரத்தில் 1976-ஆம் ஆண்டு, 'இன்று போல் என்றும் வாழ்க' என்ற படத்தில் எம்.ஜி.ஆர். அவர்களுடன் இணைந்து நடித்தேன். அந்த ஒருபடம்தான் அவருடன் சேர்ந்து நடித்தேன். அந்தப் படத்துக்குப் பின்னர் அவர் அழைத்ததின் பேரில், அ.தி.மு.க.வில் இணைந்தேன். ஆனால், அடுத்த மூன்று ஆண்டுகளிலேயே அவருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, அங்கிருந்து வெளியேறினேன்.

## கழகத்தில் உறுப்பினர்

அந்த நேரத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் தொலைபேசியில் அழைத்து, 'நீங்கள் கழகத்தில் இணைந்து கொள்ளுங்கள்' என அன்புடன் அழைத்தார். நான் அப்போது சென்னை ஓமந்தூரார் தோட்டத்தில் இருந்த, தி.மு.க அலுவலகத்துக்குச் சென்று கலைஞரைச் சந்தித்து, கழகத்தில் இணைத்துக் கொண்டேன். அவரது அந்த அழைப்புதான், 1980-ஆம் ஆண்டிலேயே கழக உறுப்பினராக, என்னை இணைய வைத்தது.

அந்த ஆண்டுதான் , எம்.ஜி.ஆர் அரசைக் கலைக்க வேண்டும் என அண்ணா சாலையில் இருந்து, ஆளுநர் மாளிகை வரை அறப் போராட்டம் நடத்தினார் கலைஞர். 50 ஆயிரம்பேர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டத்தில், முன் வரிசையில் சென்ற கலைஞருடன், அவருக்குப் பக்கத்தில் நான் நடந்து சென்றேன்.

**'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என வள்ளுவர் சொல்வதுபோல, தலைவர் கலைஞருக்கு தமிழ்நாட்டில் மட்டுமில்லை, உலகத்தில் இருக்கும் அத்தனைத் தமிழர்களும் உடன்பிறப்புகள்தான்.**

எனக்குப் பக்கத்தில் வந்தவர் அப்போதைய காங்கிரஸ் கட்சித் தலைவர் ஏ.ஆர்.மாரிமுத்து. கலைஞரின் கோரிக்கையை ஏற்று, அந்த ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் அவரது பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு, அவரைச் சந்திப்பது எனது வழக்கம். எங்கள் குடும்ப நிகழ்ச்சிகள் அத்தனைக்கும் தலைவர் வருகை தந்துள்ளார். தலைவர் மட்டுமல்ல, தலைவரின் குடும்பத்தினர் அனைவரும் குடும்பத்தோடு வருகை தந்து, என்னையும் ஒரு உடன்பிறப்பாக மரியாதை செய்துள்ளனர்.

## குடும்பத்தில் ஒருவன்

கிட்டத்தட்ட 60 ஆண்டுகளாக அந்தக் குடும்பத்தில் நானும் ஒருவனாகப் பழகி வருகிறேன் என்பது எனக்கு மிகவும் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது. அவர் எங்கள் குடும்பத் தலைவர், தமிழர் தலைவர்.

எனது திரைப்படங்களைப் பார்த்து, தலைவர் கருத்துகளைப் பகிர்ந்து கொள்வார். தலைவருக்குத் திரையுலகம் சார்பில், நடந்தப்பட்ட கொண்டாட்டங்களில் பங்கேற்று, அவர் முன் பேசிய நிகழ்வுகள் எல்லாம் மகிழ்ச்சி அளிப்பவை.

கலைஞரின் மறைவுக்குப்பின், அவரது நினைவுகளை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்லும் பணியை, இன்றைய முதலமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள். அந்த வகையில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற கலைஞரின் புகைப்படக் கண்காட்சியினைத் தொடங்கி வைத்து, பார்வையிட்டேன். அவர் தமிழக மக்களுக்கு என்னவெல்லாம் செய்தார் என்பதைப் புகைப்படங்கள் கொண்டு மிகச்சிறப்பாக கண்காட்சியை வடிவமைத்திருந்தனர். அந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டபோது, அவரை முதன்முதலில் சந்தித்தது, 1965- ஆம் ஆண்டு அல்ல, அதற்கு முன்பே சந்தித்துவிட்ட உணர்வு கிடைத்தது.

அந்தக் குடும்பத்தில் ஒருவனாக எப்போதுமே என்னை நினைத்துக்கொள்வேன். அவரைப் போன்ற தலைவர்கள் மீண்டும் பிறக்கப் போவதில்லை. அவர் தமிழ்நாட்டுக்குச் செய்துள்ளவற்றைப் பேசுவதுதான் அவரது நினைவுகளை போற்றும் வழி.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என வள்ளுவர் சொல்வதுபோல, தலைவர் கலைஞருக்கு தமிழ்நாட்டில் மட்டுமில்லை, உலகத்தில் இருக்கும் அத்தனைத் தமிழர்களும் உடன்பிறப்புகள்தான்.

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

....பகிர்வார்கள்

## சிலைகளும் வரலாறும்...



தென்காசி, திருப்பூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் வெண்ணி காலாடி, எத்தலப்பர் நாயக்கர், வீராங்கனை குயிலி ஆகியோரின் உருவச் சிலைகளை முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் திறந்து வைத்தார். அவர்களின் வரலாறுகளைப் பத்திரிகையாளர் கோவி.லெனின் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

"வெள்ளைக்காரர்களை எதிர்த்து நின்ற பூலித்தேவனுடைய படையின் தளபதிகளில் முக்கியமானவர் வெண்ணிக் காலாடி. தேவேந்திரகுல வேளாளர்களில் காலாடி என்ற பிரிவைச் சேர்ந்த இவர், பெரிய காலாடி என்றும் அழைக்கப்பட்டார்.

பூலித்தேவனின் கோட்டையை முற்றுகையிட, வெள்ளைக்காரர்கள் அனுப்பிய கான்சாகிப்பின் படை, காட்டில் முகாமிட்டிருப்பதை அறிந்து, அவர்களின் முகாமைத் தாக்கினார். இந்தச் சண்டையில் வெண்ணி காலாடியின் வயிறு கிழிக்கப்பட்டு, குடல் வெளியே வந்த நிலையிலும் தனது ஆட்களின் துணையுடன் எதிரியை விரட்டியடித்துவிட்டு, குடல் சரிந்த வயிற்றைத் தனது துண்டால் கட்டிக்கொண்டு, குதிரையில் ஏறி விரைந்து வந்து, பூலித்தேவனிடம் நிலைமையை உணர்த்திவிட்டு, அவரது மடியிலேயே உயிரைவிட்டவர்.

வீரமங்கை வேலுநாச்சியார் துணிவுடன் வெள்ளையர்களை எதிர்த்து போரிட்டபோது, அவருக்குப் பாதுகாவலராகவும் படையணியில் முக்கியமானவராகவும் கருதப்படும் வீரப்பெண் குயிலி, தன் உடலில் எண்ணெயைப் பூசிக்கொண்டு, வெள்ளையரின் ஆயுதக்கிடங்கிற்குள் புகுந்து தனக்குத்தானே தீ வைத்துக்கொண்டு ஆயுதக் கிடங்கை அழித்தார் என்று சொல்லப்படுகிறது.

வீரபாண்டிய கட்டபொம்மனை, வெள்ளைக்காரன் தூக்கிலிட்ட பிறகு, அவருடைய தம்பி ஊமைத்துரைக்கு ஆதரவாக வெள்ளையர்களை எதிர்த்துக் களம் கண்ட 14 பாளையக்காரர்களில் முதன்மையானவர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்ப நாயக்கர். ஆங்கிலேயனைத் தூக்கிலிட்ட முதல் பாளையக்காரர் என்ற பெயரும் எத்தலப்பருக்கு உண்டு. அந்தக் கோபத்தில் படைதிரட்டி வந்த வெள்ளையர்கள் தளி கோட்டையைத் தகர்த்து எத்தலப்பரைக் கொன்றார்கள்" என்கிறது அவரது பதிவு.

தெற்கிலிருந்து எழுதப்படும் விடுதலைப் போராட்ட வரலாற்றுக்கு இந்த நினைவுச் சின்னங்கள் சான்றாக நிற்கும்.

## ஃப்ளாஷ்பேக்



### வீதி தோறும் பறந்த கழகக் கொடி!



மைதீன் பட்டாணி

கழகத்திற்கு 1993-ஆம் ஆண்டு சோதனை வந்தபோது, சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்த அன்றைய மாநில இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள், சங்கரன்கோவிலில் ஒவ்வொரு வீதியாக வந்து கொடியேற்றினார். நகரக் கழகம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பேசிவிட்டு, சங்கரன்கோவில் புகைவண்டி நிலையத்திலிருந்து, சென்னை புறப்பட்டபோது எடுத்த படம். உடன் அன்பில் பொய்யாமொழி அவர்கள் இருந்தார்கள். அப்போது எனக்கு வயது 16. இந்த நினைவுகளை எல்லாம் எண்ணிப் பார்த்துப் பூரிப்படைகிறேன்.

– **மைதீன் பட்டாணி, தென்காசி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### வெள்ளிக் கொல்லறு!

1958-ஆம் ஆண்டு, மே மாதம் 10 மற்றும் 11 தேதிகளில், திருவாரூரில், தஞ்சை மாவட்டக் கழகத்தின் 3-வது மாநாடு நடைபெற்றது. தேர்த்திருவிழாவுக்கு வருவதுபோல, தமிழ்நாடு முழுவதும் கழகத்தினரும், ஆதரவாளர்களும் திரண்டனர். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். கழகக் கட்டடத்துக்கு நாவலர் அடிக்கல் நாட்டியபோது, வெள்ளியால் ஆன கொல்லறு (கொத்தனார் கரண்டி) அளிக்கப்பட்டது. மாநாட்டு ஊர்வலக் காட்சிகள் படம்பிடிக்கப்பட்டன.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

628

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131